**நாள் 23.02.2026 CC 223/2019 அ.சா. 1**

**பெயர் மணிகண்டன், த/பெ மகாலிங்கம்**

**எதிரி நீதிமன்றத்தில் ஆஜர்**

(எதிரி தரப்பில் குவிமுச பிரிவு 311 ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டு சாட்சி மனுவின் பேரில் அழைக்கப்பட்டு சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு எதிரி தரப்பில் கு.வி)

1.சம்பவம் நடந்ததாக சொல்லும் சமயத்தில் நான் கோயம்புத்தூரில் பொறியியல் படித்து வந்தேன். ராமகிருஷ்ணா தொழில்நுட்ப கல்லூரியில் மூன்றாம் ஆண்டு படித்து வந்தேன். விடுதியில் தங்கி படித்து வந்தேன்.பொதுவாக கல்லூரி வகுப்புகள் திங்கள் முதல் சனிக்கிழமை வரை இருக்கும். கல்லூரி வகுப்பு நேரம் காலை 8.45 முதல் மாலை 5.00 மணி வரை இருக்கும். சிறப்பு வகுப்புகள் இருக்காது. மடத்துக்குளம் கழுகறையில் தான் பிறந்ததிலிருந்து வசித்து வருகிறேன். பொதுவாக மாதம் ஒருமுறை வார இறுதி நாட்களில் வீட்டிற்கு வருவேன். பொதுவாக அனைத்து சனிக்கிழமை வகுப்புகள் இருககும் என்றால் சரியல்ல. எனக்கு ஓட்டுநர் உரிமம் உள்ளது. எனது அப்பாவிற்கு ஓட்டுநர் உரிமம் இருந்தது.

2. சம்பவம் நடந்ததாக சொல்லும் பகுதி பொதுவாக இருட்டான பகுதி என்றால் சரியல்ல. அந்த பகுதியில் மின்விளக்குகள் இல்லை என்றால் சரியல்ல. வாகனங்கள் அதிகமாக செல்லக்கூடிய பகுதி என்றால் சரிதான். அந்த பகுதியில் கண்காணிப்பு கேமரா உள்ளதா என்றால் சரியல்ல. எனக்கு விபத்து சம்பந்தமாக எப்போது தகவல் கிடைத்தது என்றால் நான் கூட வந்து கொண்டிருந்தேன். சம்பவம் நடந்ததாக சொல்லும் சமயத்தில் எப்போது வீட்டிற்கு வந்தேன் என்றால் எனது பெரியம்மா மகள் திருமணத்திற்காக ஒரு நாள் முன்னர் வந்தேன். நான் சென்றதாக சொல்லும் இருசக்கர வாகனத்தின் பதிவு எண்ணை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.

3. வீட்டிலிருந்து எத்தனை மணிக்கு கிளம்பினோம் என்றால் மதியம் மைவாடி சென்றுவிட்டு திரும்ப வரும்போது விபத்து ஏற்பட்டது. என்ன வேலையாக சென்றோம் என்றால் உறவினர் வீட்டிற்கு சென்றோம். உறவினர் வீட்டிற்கு சென்றதாக புகாரில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். எனது அப்பா ஓட்டி சென்றதாக சொல்லும் இருசக்கர வாகனம் திருமலைசாமி என்பவர் பெயரில் பதிவு சான்றிதழ் உள்ளது என்றால் சரிதான். அந்த வாகனத்திற்கு காப்பீடு இல்லை என்றால் சரியாக

தெரியவில்லை. அந்த வாகனத்திற்கு பதிவு காலாவதி ஆகிவிட்டது என்றால் சரியாக தெரியவில்லை. பொதுவாக பதிவு இல்லாத வாகனம் சாலையில் இயக்கக்கூடாது என்றால் சரிதான். நான் ஓட்டிச் சென்றதாக சொல்லும் வாகனத்தின் உரிமையாளர் எனது அப்பாவின் நண்பர் கார்த்திக்கேயன். உண்மையில் சொந்த வேலையாக சென்றிருந்தால் நானும் எனது அப்பாவும் ஒரே வாகனத்தில் சென்றிருப்போம் என்றும் தனித்தனி வாகனத்தில் செல்ல வேண்டியதில்லை என்றும் இழப்பீடு பெற வேண்டி எதிரி மீது பொய்யாக புகார் கொடுத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது அப்பா உடுமலைப்பேட்டையில் இருந்து வந்தார்.

4.அந்த சமயத்தில் எனது அப்பா சக்தி என்ற தனியார் பேருந்தில் ஓட்டுநராக இருந்தார். அவர் ஒருநாள் விட்டு ஒருநாள் மதியம் சென்று மறுநாள் மதியம் திரும்புவர். சம்பவம் நடந்ததாக சொல்லும் நாளில் எனது அப்பா உடுமலையிலிருந்து எத்தனை மணிக்கு கிளம்பினார் என்றால் தெரியாது. மடத்துக்குளத்திலிருந்து எனது உறவினர் வீட்டிற்கு நான் தனியாக தான் சென்றேன். எத்தனை மணிக்கு உறவினர் வீட்டிலிருந்து திரும்பினோம் என்றால் மாலை சுமார் 6.00 மணிக்கு கிளம்பினோம். நான் முன்னர் கிளம்பி வந்துவிட்டேன் என்றால் சரியல்ல. அவர் பின்னால் வந்தேன். எனது அப்பா உறவினர் வீட்டிற்கு மாலை 4.00 மணிக்கு வந்தார். அந்த உறவினர் வீட்டில் நிகழ்ச்சி எதுவும் இல்லை. எனது அப்பாவும் நானும் சுமார் அரை கிலோமீட்டர் இடைவெளியில் வந்திருப்போமா என்றால் இல்லை. சுமார் 50 அடி இடைவெளியில் வந்தோம். எனது அப்பாவிற்கு மது அருந்தும் பழக்கம் உள்ளது. அருகில் இருந்தவர்கள் ஆம்புலன்ஸிற்கு தகவல் சொன்னார்கள். யாரென்று சரியாக தெரியாது.

5. மாலை சுமார் 7 மணிக்கு உடுமலைப்பேட்டை அரசு மருத்துவமனைக்கு சென்றோம். எனது அப்பாவை யார் மருத்துவமனையில் சேர்த்தது என்றால் நானும் எனது நண்பர்களும் சேர்த்தோம். இரவு சுமார் 9.00 மணிக்கு கோவை அரசு மருத்துவமனைக்கு கிளம்பினோம். அங்கு சுமார் 11.00 மணி அளவில் சேர்த்தோம். எனது அப்பாவை காப்பாற்ற முடியாது என்று சொன்னதால் எங்கள் சொந்த விருப்பத்தின் பேரில் உடுமலை அரசு மருத்துவமனைக்கு அழைத்து வந்தோம். மறுநாள் மதியம் கிளம்பி வந்தோம். மதியம் சுமார் 3.00 மணிக்கு உடுமலையில் சேர்த்தோம். சம்பவ இடத்தில் போலிசார் விசாரித்து மகசர் மற்றும் வரைபடம் தயார் செய்த போது இருந்த சாட்சிகள் பெயர் என்ன என்றால் நியாபகம் இல்லை. மடத்துக்குளத்தை சேர்ந்தவர்கள்.

பட்டியல் சாட்சி ரவிச்சந்திரன், பழனிச்சாமி, ரங்கசாமி, குப்புசாமி, அ.சா. 2 மற்றும் 3 ஆகியோர் எனது உறவினர்கள் என்றால் சரிதான். புகாரில் விபத்தை நேரில் பார்த்ததாக சொன்ன அருகில் உள்ள நபர்கள் பெயர் தெரியாது.

6. 04.03.2018 ம் தேதி இரவு சுமார் 7 மணியளவில் புகார் கொடுத்தேன். நானும் உறவினர்களும் சென்றோம். போலிஸ் சொன்னபடி புகார் எழுதிக் கொடுத்தேனா என்றால் இல்லை நானாக எழுதிக் கொடுத்தேன். இறந்துபோன எனது அப்பாவிற்கு ஓட்டுநர் உரிமம் இல்லாததால் ஏதோ ஒரு வாகனத்தில் மோதியவரை இழப்பீடு பெற வேண்டி எதிரி வாகனம் மோதியதாக பொய்யாக புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. பதிவு காலாவதியாகி இயக்கத் தகுதியில்லாத வாகனத்தில் சென்று விபத்து ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல. சம்பவ இடத்தில் நான் இல்லை என்றால் சரியல்ல. உண்மையில் சம்பவ இடத்தில் இருந்திருந்தால் பார்வை மகசர் சாட்சிகள் பெயரை போலிஸ் விசாரணையில் சொல்லியிருப்பேன் என்றால் சரியல்ல.

7. போலிஸார் என்னை சம்பவம் நடந்த மறுநாள் சம்பவ இடத்தில் வைத்து விசாரித்தார்கள். என் முன்னால் 2 பேரை விசாரித்தார்கள். அவர்கள் பெயர் நியாபகம் இல்லை. எதிரிக்கும் வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

DHEENADHAYALAN M

Digitally signed by DHEENADHAYALAN M
Date: 2026.02.23 14:35:40 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்